நடப்பு கரீப் பருவத்தில் நெல் பயிரிடும் பரப்பளவு அதிகரிப்பு

ஆகஸ்ட் 16,2011,03:28



புதுடில்லி:நாட்டின் வடகிழக்கு மற்றும் வடமேற்கு பிராந்தியங்களில் பருவ மழை நன்கு உள்ளதால், நடப்பு கரீப் பருவத்தில் (ஜூலை-அக்டோபர்) விவச ாயிகள் அதிகளவில் நெல் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நடப்புவேளாண் பருவத்திலும், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு கரீப் பருவத்தில், செ ன்ற 12ம்தேதி வரையிலான காலத்தில், நாட்டின் நெல் பயிரிடும் பரப்பளவு 2.95கோடி எக்டேர் என்ற அளவிற்கு இருக்கும் என மத்தியவேளாண் துறை மதிப்பிட்டுள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தை விட 9 சதவீதம் அதிகம்.கடந்த 2010-11ம்வேளாண் பருவத்தில்,சாதனை அளவாக, நாட்டில் 3.83கோடி எக்டேரில் நெல் சாகுபடி மேற் கொள்ளப் பட்டுள்ளது. இதனால், நெல் உற்பத்தி, முந்தைய ஆண்டை விட 9சதவீதம் அதிகரித்து, 9.50கோடி டன்னாக உயர்ந்தது.நடப்பு 2011-12ம்வேளாண் பருவத்தில், 11கோடி டன் நெல் உற்பத்திமேற்கொள்ள மத்திய அர” இலக்கு நிர்ணயித்துள்ளது.

நாட்டில் அதிகளவில் நெல் சாகுபடி செய்யும்மேற்கு வங்க மாநிலத்தில், சென்ற 12ம்தேதி நிலவரப்படி 34.70 லட்சம் எக்டேரில் நெல் பயரிடப்பட்டுள்ளது.இது, கடந்தாண்டு இதே காலத்தை விட 11 லட்சம் எக்டேர் அதிகமாகும்.இதே போல், உத்தரபிரதேச ம் (58 லட்சம் எக்டேர்), பீகார் (25 லட்சம் எக்டேர்), ஜார்க்கண்ட் (10 லட்ச ம் எக்டேர்),சத்திஸ்கர் (32 லட்சம் எக்டேர்), பஞ்ச ாப் (27 லட்சம் எக்டேர்) ஆகிய மாநிலங்களிலும் நெல் பயிரிடும் பரப்பளவு, சென்ற ஆண்டை விட அதிகரித்துள்ளது.

**வேலிகாத்தானும் விவசாயிகளுக்கு எதிரி...**

First Published : 16 Aug 2011 12:32:05 AM IST

சென்னை, ஆக. 15: பார்த்தீனியம் செடியை அழிப்பதை ஓர் இயக்கமாக தமிழக அரசு ஏற்று செயல்படுத்தும் என அறிவித்துள்ள முதல்வர் ஜெயலலிதா, வேலிகாத்தான் முள் செடிகளை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாய நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

பார்த்தீனியம் செடிகள் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் உடல்நலக் கேடுகளை விளைவிப்பவை என்று சட்டப்பேரவையில் அதிமுக உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் தெரிவித்த போது, அதை முற்றிலும் அழிக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்தார் முதல்வர்.

இந்த அறிவிப்பு விவசாயிகளிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதே நேரத்தில் வேலிகாத்தான் முள் செடியின் பாதிப்புகளையும் அறிந்து அதையும் அழித்தால், நிறைய விவசாய நிலத்தில் வேறு சாகுபடிகள் செய்வது சாத்தியமாகும் என்று விவசாய நிபுணர்கள் கூறுகின்றனர்.

15 முதல் 30 அடி ஆழம் வரை ஊடுருவிச் செல்லும் இச் செடியின் வேர்கள், வறண்ட சூழ்நிலையிலும் வளரக்கூடிய தன்மை உள்ளவை. நிலத்தடி நீர் கிடைத்தால் அதை எடுத்துக் கொள்ளும். அதனால் மற்ற பயிர்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் போகும். எனவே வேலிகாத்தான் முள் செடி உள்ள இடத்தின் அருகே வேறு பயிர்கள் வளராது என விவசாயிகள் விளக்குகின்றனர்.

இந்தச் செடியை கால்நடைகள் சாப்பிடாது. தவறுதலாக வேறு இலைகளுடன் சேர்த்து இதன் இலைகளை கால்நடைகள் சாப்பிட நேர்ந்தால், அவற்றுக்கு வயிற்றுக் கோளாறு ஏற்படும் என்கின்றனர்.இந்த முள் செடி உள்ள இடத்தில் ஆக்சிஜன் குறைவாக இருக்கும் என்பதால் பறவைகள் கூட கூடு கட்டுவது இல்லை. எனவே இவை அதிகம் உள்ள பகுதிகளில் பறவைகள் வாழாது.ஆணி வேர் இல்லாத சிறிய வகை மூலிகைகள் இந்த முள் செடியின் கீழே வளர முடியாமல், இறந்து போகின்றன.

விவசாயத்துக்கு, விவசாயிக்கு, கால்நடைகளுக்கு, பறவைகளுக்கு என எதற்குமே பயன்படாத இந்த முள்செடி, கரி கட்டை தயாரிப்புக்கு மட்டும் பயன்படுகிறது.

இதை வெட்டி எடுத்து, எரித்து, அதில் கிடைக்கும் கரியை தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதை சிலர் தொழிலாகவே செய்கின்றனர். ஆனால்,ஓரிரு மாவட்டங்களில்தான் இத் தொழில் உள்ளது.எனவே இதை விவசாயிகளின் பகைவன் என்ற பட்டியலில் அமெரிக்கா போன்ற நாடுகள் சேர்த்துள்ளதாக விவசாயத் துறையினர் கூறுகின்றனர்.

கேரளத்தில் அதிகாரபூர்வமாக இதற்கு எதிராக இயக்கம் எதுவும் இல்லை என்றாலும், இந்தச் செடி எங்காவது வளர்வதைப் பார்த்தால் முதலில் அதை வெட்டி அகற்றிவிட்டுத்தான் விவசாய வேலையை பார்ப்பது என்பதை விவசாயிகள் உறுதியாகப் பின்பற்றுகின்றனராம்.

விவசாய நிலங்களில் வேலியாகப் பயன்படுத்த வேறு மரங்களை வளர்க்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.இந்தச் செடி விறகாகப் பயன்பட்டது ஒரு காலம். இப்போது எல்லா வீடுகளுக்கும் அரசே இலவச கேஸ் அடுப்பு தந்துவிட்டது. இனி விறகிற்கும் இது தேவையில்லை. எனவே பார்த்தீனியத்துடன், இந்த வேலிகாத்தான் முள் செடிகளையும் அகற்ற வேண்டும் என்கின்றனர் விவசாயிகள்.

பார்த்தீனியம் : பார்த்தீனியம் செடியை அழிக்க உப்பு கலந்த நீரை தெளித்தால் போதும் என்று விவசாய நிபுணர்கள் கூறினாலும், அதை முற்றிலுமாக அழிக்க சின்ன ஆவாரம் விதையை தூவினால் நல்ல பலன் கிடைக்கிறது என்று தாவரவியல் துறை நிபுணர்கள் கூறுகின்றனர்.

உப்பு கலந்த நீரை தெளித்தால் செடி அப்போதைக்கு அழியுமே தவிர, வேர் அழிந்துவிடாது என்கின்றனர்.

சின்ன ஆவாரம் விதைகளை அந்தப் பகுதியில் தூவினால் அது வளரும் போது, பார்த்தீனியம் விதைகள் முற்றிலும் அழிந்து போவதை தாங்கள் நடைமுறையில் பார்த்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

எனவே பார்த்தீனியத்தை முற்றிலுமாக, மூல ஆதாரத்தையே அழிக்கும் வழிகள் குறித்து நிபுணர்கள் கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என தாவரவியல் துறையினர் வலியுறுத்துகின்றனர்.

மரபணு பயிர்கள் : தமிழகத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தியை பரவலாக்கிட எந்த நடவடிக்கையையும் அரசு எடுக்காது என சட்டப்பேரவையில் முதல்வர் அறிவித்துள்ளார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினருக்கு இது நிம்மதியைத் தந்துள்ளது.

இருந்தாலும், சில அதிகாரிகள் மரபணு மாற்றம் செய்தப் பயிர்களுக்கு ஆதரவாக இருப்பதால், அரசு இதில் விழிப்போடு இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். அரசின் அனுமதி இல்லாமல் மரபணு மாற்ற விதை தயாரிப்புக்கு எந்தவிதமான ஆராய்ச்சியும் தமிழகத்தில் நடத்தக் கூடாது என்பதை உறுதியாகச் செயல்படுத்த வேண்டும் என்கின்றனர் அவர்கள்.

**வேளாண்மைக் கல்லூரி சார்பில் தொழில்நுட்பக் கண்காட்சி**

First Published : 15 Aug 2011 10:46:18 AM IST

தேனி, ஆக. 14:÷சின்னமனூர் அருகே உள்ள காமாட்சிபுரத்தில் மதுரை வேளாண்மைக் கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண்மை அறிவியல் மையம் ஆகியவற்றின் சார்பில் விவசாயத் தொழில்நுட்பக் கண்காட்சி நடைபெற்றது.

÷நிகழ்ச்சிக்கு, சென்டெக்ட் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். வேளாண்மைக் கல்லூரி பேராசிரியர்கள் சுஜாதா, அமுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

÷மாணவிகள் அனிதா, அன்பரசி, யோகலட்சுமி ஆகியோர் கலப்புத் தீவன பயிர் சாகுபடி மாதிரியை பார்வைக்கு வைத்து, தீவனப் பயிர் சாகுபடியின் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

மாணவிகள் அஞ்சு, அபராஜிதா சர்மா, சுவேதா வர்மா ஆகியோர் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் குறித்தும், அன்பரசி, அகிலா, அட்சயா, அழகுச்செல்வி ஆகியோர் மண்புழு உரக்குடில் குறித்தும், சுபாதேவி, வசந்தி, அறிவுச்செல்வி ஆகியோர் ஒருங்கிணைந்த வேளாண்மைக் காடுகள் குறித்தும் மாதிரிகள் அமைத்து விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் அளித்தனர்.

÷பாய் நாற்றங்கால், திருந்திய நெல் சாகுபடி, நிலக்கடலையில் உயிர் விதை பிரித்தெடுத்தல், பஞ்சகாவ்யா ஆகியவை குறித்து மாணவர்கள் கண்ணன், அப்ரார் அஹமது, அஜய்குமார், அர்ஜுன், அசோக்குமார் ஆகியோர் விளக்கினர்.

÷பப்பாளியில் மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல், உயிர் உரங்களின் நன்மை, மண் பரிசோதனையின் அவசியம் ஆகியவை குறித்து மாணவர்கள் சந்திரன், பாரதிராஜா, செல்லப்பாண்டி, பாஸ்கரன் ஆகியோர் மாதிரிகள் அமைத்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

**தென்னை காப்பீட்டுத் திட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தை சேர்க்க வலியுறுத்தல்**

First Published : 15 Aug 2011 12:00:33 PM IST

மன்னார்குடி, ஆக. 14: மத்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் தென்னை காப்பீட்டு திட்டத்தில், திருவாரூர் மாவட்டத்தையும் சேர்க்க வேண்டும் என தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கத்தின் ஒன்றிய முதல் மாநாடு மன்னார்குடியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாநாட்டிற்கு சங்கத்தின் மாவட்ட துணைச் செயலர் பி.ஜி. தமிழரசன் தலைமை வகித்தார்.

ஒன்றியக் குழுத் தலைவர்கள் மா. கல்யாணசுந்தரம் (முத்துப்பேட்டை), பி.ஆர். பாண்டியன் (கோட்டூர்), பி. பாஸ்கரவள்ளி (மன்னார்குடி), மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.பி.ஆர். வித்வசிகாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தேங்காய் கொள்முதல் விலை ஏற்ற இறக்கத்தின் போது இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க, உற்பத்தி செலவை கணக்கிட்டு கட்டுப்படியான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். மேலும், முழு தேங்காய்களாக கொள்முதல் செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும்.

தென்னை விவசாயத்தை உணவு உற்பத்தி திட்டத்தில் இணைத்து இலவச மின்சாரம் வழங்க வேண்டும். தென்னை சாகுபடியில் ஈடுபட்டுள்ள 60 வயது கடந்தவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்க வேண்டும்.

விவசாயிகள் பயன் பெறும் வகையில், கொள்முதல் நிபந்தனைகளைத் தளர்த்தி, கொப்பரை தேங்காய் கிலோ ஒன்றுக்கு ரூ. 70 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். தொழில் முனைவோர், விவாசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்பப் பயிற்சி, மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தருவதுடன் திருவாரூர் மாவட்டத்திற்கு உள்பட்ட பகுதியில் தென்னை சார்ந்த துணை தொழில் நிறுவனங்களை தொடங்க மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும்.

மாநாட்டில், சங்கத்தின் மாநிலத் தலைவர் சி. கிருஷ்ணமூர்த்தி, மாநிலச் செயலர் பி.எஸ். மாசிலாமணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர். சங்கத்தின் மாவட்டத் தலைவர் என். ஜீவானந்தம், மாவட்டச் செயலர் என். கருணாநிதி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க நகரத் தலைவர் கி.வ. துரையரசன், ஒன்றியச் செயலர் ஆர். வீரமணி, கோட்டூர் ஒன்றியத் தலைவர் ஆர்.ஆர். பந்துலு, ஒன்றியச் செயலர் பி. பரந்தாமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மானிய விலையில் உர விதைகள் விநியோகம்**

First Published : 15 Aug 2011 10:01:30 AM IST

கோபி, ஆக.14: கோபி வேளாண்மை விரிவாக்க மையத்தில், 50 சதவீத மானிய விலையில் தக்கைப்பூண்டு பசுந்தாள் உர விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

இயற்கை உரங்களில் மிகவும் எளிதாகவும், குறைந்த செலவிலும் கிடைக்கக் கூடியவை பசுந்தாள் உரங்கள். இது மண்ணில் காற்றோட்டத்தை அதிகரிக்கின்றது. பயிர் வளர்ச்சிக்குத் தேவையான சாம்பல் சத்துக்கள், நுண்ணூட்டச் சத்துக்களையும் தருகின்றன. அதேசமயம், ரசாயன உரங்களை அளவுக்கு அதிகமாக மண்ணில் இடுவதால், மண் வளம் பாதிப்படைந்து பயிர் வளர்ச்சியும், மகசூலும் குறைகிறது. இயற்கை உரங்களின் தன்மையைப் பொறுத்து பயிர்களிலிருந்து விளைவிக்கப்படும் பொருள்களின் தரமும், சுவையும் அதிகமாகிறது. இந்நிலையில் பசுந்தாள் உரங்களின் சாகுபடி மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

தக்கைப்பூண்டு: தமிழ்நாட்டில் ஏற்ற பசுந்தாள் உரப் பயிர்களில் தக்கைப்பூண்டுக்கு முக்கிய இடம் உண்டு. இது குறுமண், களிமண் நிலத்துக்கும், பல தட்பவெப்ப நிலைக்கும் ஏற்ற வீரியமான முரட்டுப் பயிராகும். தக்கைப் பூண்டை 5 ஆண்டுகள் தொடர்ந்து பயிர் செய்தால், மண் வளம் பெறும். மேலும், வறட்சியைத் தாங்குவதுடன் நீர் தேங்கும் இடத்திலும் நன்கு வளரக்கூடியதாகும்.

விதையளவு: ஒரு ஏக்கருக்கு 15 கிலோ விதை போதுமானதாகும். 3 முதல் 6 மாதங்களில் ஏக்கருக்கு 4.5 டன் முதல் 8 டன்கள் வரை பசுந்தழை கிடைக்கும். குறிப்பாக நெல் வயலுக்கு

பசுந்தாள் உரமிடுவதால், 35 சதவீதம் வரை மகசூல் அதிகரிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வளவு, அற்புத குணங்கள் நிறைந்த தக்கைப்பூண்டு விதைகள் கோபி, வேளாண்மை விரிவாக்க மையத்தில் 50 சதவீத மானிய விலையில், கிலோ ரூ.21-க்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. 1800 கிலோ விதை இருப்பு இருப்பதால் தேவைப்படும் விவசாயிகள் பெற்றுப் பயனடையலாம்.

இத்தகவலை கோபி, வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) அ.நே.ஆசைத்தம்பி தெரிவித்தார்.

**பனை மரங்களைப் பாதுகாக்கக் கோரி பேரணி நடத்த முடிவு**

First Published : 15 Aug 2011 03:06:01 PM IST

கடலூர், ஆக. 14: பனை மரங்களைப் பாதுகாக்க வலியுறுத்தி, கன்னியாகுமரியில் இருந்து சென்னைக்கு, விழிப்புணர்வுப் பேரணி நடத்த, தமிழ்நாடு கள் இயக்கம் முடிவு செய்து உள்ளது.

தமிழ்நாடு கள் இயக்க ஆலோசனைக் கூட்டம், கடலூரில் சனிக்கிழமை நடந்தது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் முடிவதற்குள், கள்ளுக்கு விதிக்கப்பட்டு இருக்கும் தடையை நீக்கி, அறிவிக்க வேண்டும்.

இதன் மூலம் 10 லட்சம், பனை தென்னைத் தொழிலாளர் குடும்பங்கள், 50 லட்சம் பனை, தென்னை விவசாயக் குடும்பங்கள் பயன் அடையும்.

தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமல்படுத்தப்படும் வரை, டாஸ்மாக் மதுக்கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுவகைகள் அனைத்தும், பனை தென்னை மூலப் பொருள்களைக் கொண்டதாகவே இருக்க வேண்டும். தரக்குறைவான மது வகைகளைத் தடை செய்ய வேண்டும்.

கூட்டத்துக்கு, தமிழ்நாடு கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் நல்லசாமி தலைமை தாங்கினார்.

அமைப்பாளர்கள் சுந்தரமூர்த்தி, ரவிக்குமார், தங்கராசு முன்னிலை வகித்தனர். ம.தி.மு.க. இலக்கிய அணிச் செயலர் வந்தியத்தேவன், இந்திய விவசாயிகள் சங்கத் தலைவர் குருசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மீன்வளத் துறை மூலம் வைகை அணையில் மீன் வளர்ப்பு**

First Published : 14 Aug 2011 11:37:11 AM IST

ஆண்டிபட்டி, ஆக. 13:÷வைகை அணையில் மீன்வளத் துறையின் சார்பில் 1,15,000 மீன் குஞ்சுகள் விடப்பட்டு, வளர்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

÷இதுகுறித்து வைகை அனையின் மீன்வளத் துறை ஆய்வாளர் சுனில்தாஸ் கூறியது:÷மேட்டூர் அணையில் இருந்து கட்லா, ரோகு, மிருகால் ஆகிய வகை மீன் குஞ்சுகள் கடந்த ஜூன் மாதம் வாங்கி வரப்பட்டு வைகை அணையில் உள்ள மீன்வளத் துறைப் பண்ணையில் 3 மாதங்களாக வளர்க்கப்பட்டு, தற்போது நன்கு வளர்ச்சியடைந்த 1,15,000 மீன் குஞ்சுகள் வைகை அணை நீர்த்தேக்கப் பகுதியில் விடப்பட்டுள்ளன.

÷இந்த மீன்கள் முழு வளர்ச்சி அடைந்ததும், மீன்வளத் துறை சார்பில் விற்பனை செய்யப்படும் என்றார்.

தினமலர்

**மிளகு பயிரில் வாடல் நோய் தாக்குதல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2011,02:25 IST

ராசிபுரம்: "மிளகு பயிரில் வாடல் நோயை தடுக்க, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு அதிக மகசூல் பெற்று லாபம் பெறவேண்டும்' என, கொல்லிமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அசோகன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கொல்லிமலை வட்டாரத்துக்கு உட்பட்ட பகுதிகளில், 600 ஹெக்டர் பரப்பளவில் மிளகு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அப்பயிரில், தற்போது பூ மற்றும் பிஞ்சு பருவத்தில் உள்ள மிளகு பயிரில் வாடல் நோய் தாக்கப்பட்டு வருகிறது. மிளகு சாகுபடி செய்துள்ள விவசாயிகள், வாடல் நோய் வராமல் தடுக்க கண்காணிப்பதுடன், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.வாடல் நோய், நாற்றங்கால், இளஞ்செடிகள் மற்றும் மகசூல் தரும் கொடிகளை தாக்குகிறது. பொதுவாக இந்நோய் பருவமழை காலத்தில் அதிகமாக காணப்படும். இந்நோய் அடித்தண்டழுகள் என அழைக்கப்படுகிறது.

மிளகு பயிரின் அடித்தண்டு பகுதியில் இருந்து தாக்கும்.இந்நோயால் தாக்கப்பட்ட கொடியின் தண்டு பாகத்தில் இருந்து ஒரு அடி உயரத்தில் நீர் கசிந்த புள்ளிகள் தோன்றும். இலைகள் மஞ்சள்

நிறமாக காணப்படும். மேலும், வேர் அழுகி கொடி வாட ஆரம்பிக்கும். இலைகள் சத்து குறைந்து கொட்டி விடும். இந்நோய் தாக்கப்பட்ட கொடி, 10 முதல், 20 நாளில் காய்ந்துவிடும்.மேற்குறிப்பிட்ட நோய் கட்டுப்படுத்த, ஒருங்கிணைந்த முறையில் மிளகு கொடியில் கீழ் படரும் கொடிகளையும், தரையில் இருந்து, ஒரு மீட்டர் உயரம் வரை பக்கக் கிளைகளையும் அவ்வப்போது நீக்கிட வேண்டும். மழைக்காலத்தில், கொடி தூரில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.நோயினால் பாதிக்கப்பட்ட கொடிகளை, தூருடன் அகற்றி எரித்து விடவேண்டும். 0.25 சதவீதம் காப்பர் ஆக்ஸி குளோரைடு கலவையை ஊற்ற வேண்டும்.

தரையில் படரும் கொடி, தொங்கும் வாலது, தூரில் வளரும் பக்கக்கிளைகளை கவாத்து செய்யும்போது ஏற்படும் காயத்தை போர்டோ பசையினால் பூச வேண்டும்.தவிர, 0.25 சதவீதம் காப்பர் ஆக்ஸி குளோரைடை மிளகு கொடி இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். இயற்கை முறையில் கட்டுப்படுத்திட, சூடோமோனாஸ் புளோரசன்ஸ் மற்றும் டிரைக்கோடாமா விரிடி ஆகியவற்றை தலா ஒரு லிட்டர் நீருடன், 5 கிராம் வீதத்தில் கலந்து கொடி ஒன்றுக்கு, 5லிட்டர் ஊற்ற வேண்டும்.இதனால், தரைப்பகுதியின் பக்கமுள்ள தண்டும், வேர்ப்பகுதியும் நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும். மேற்குறிப்பிட்ட நவீன முறைகளை பயன்படுத்தி, மிளகு பயிரில் அதிக சாகுபடி செய்து மகசூல் பெற்று லாபம் அடையலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**தென்னையில் நோய் தாக்குதல்: கட்டுப்படுத்த விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2011,01:46 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்னையை அதிக அளவில் ஈரியோஃபைட் நோய் தாக்கி வருவதால், அதனை கட்டுப்படுத்தும் "அசாடிராக்சின்' மருந்தை தென்னை விவசாயிகளுக்கு தமிழக அரசு இலவசமாக வழங்க வேண்டும், என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்று படுகை பகுதிகளான காவேரிப்பட்டணம், மாதேப்பட்டி, நெடுங்கல், அரசம்பட்டி ஆகிய பகுதிகளில் அதிக அளவில் தென்னை மரங்கள் உள்ளது. மேலும், மாவட்டம் முழுவதும் மொத்தம், 20 லட்சத்துக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளது. கடந்த 11 ஆண்டுகளுக்கு முன், மாவட்டத்தில் உள்ள தென்னை மரங்களில் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஏற்பட்டது.நோய் தாக்கிய மரங்களில் தேங்காய்களின் பருமன் குறைந்து கடும் விலை வீழ்ச்சி அடைந்தது. நோயை கட்டுப்படுத்த மரங்களுக்கு வேர் மூலம் செலுத்தப்படும் "அசாடிராக்சின்' என்ற மருந்து அப்போது விவசாயிகளுக்கு அரசு இலவசமாக வழங்கியது.

இதனால் விவசாயிகள் அனைவரும் தவறாமல் மருந்தை பெற்று ஒரே நேரத்தில் தென்னை மரங்களில் வேர்களில் கட்டி விட்டனர்.இதை தொடர்ந்து நோய் தாக்குதல் ஓரளவுக்கு கட்டுக்கள் வந்தது. இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தன்னையில் மீண்டும் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஏற்பட்டது. நோயை கட்டுப்படுத்தும் அசாடிராக்சின் மருந்தை அரசு இலவசமாக வழங்காமல், 50 சதவீத மானியத்தில் வழங்க முடிவு செய்தது. இதற்காக, கிருஷ்ணகிரி மாவட்டத்துக்கு, 8 லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள, 1,200 லிட்டர் அசாடிராக்சின் மருந்து வழங்கியது. ஒரு லிட்டர் அசாடிராக்சின் மருந்தின் விலை, 700 ரூபாய்.விலை அதிகமாக இருந்த கராணத்தால் பல விவசாயிகள் இந்த மருந்தை வாங்க ஆர்வம் காட்டவில்லை.

மேலும், ஒருசில விவசாயிகள் மட்டும் இந்த மருந்தை வாங்கி தோட்டங்களில் உபயோகித்தனர். பொதுவாக காற்றில் பரவும் ஈரியோஃபைட் நோய் ஒருங்கிணைந்த நோய் கட்டுப்பாட்டு முறைகளை அனைத்து விவசாயிகளும் சேர்ந்து செய்தால் தான் நோய் கட்டுக்குள் வரும். ஒரு இடத்தில் ஒரு விவசாயி மட்டும் இந்த மருந்தை உபயோத்தால் எவ்வித பயனும் ஏற்படாது.கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன், 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட்ட மருந்து விற்பனையாகாமல் தேக்கமடைந்து காலாவதியாகி அரசுக்கு பணம் விரயம் ஆனது. அந்த கால கடத்தில் விவசாயிகள் விலை கொடுத்து வாங்கி மருந்தை உபயோகிக்காததால் தற்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல இடங்களில் மீண்டும் ஈரியோஃபைட் நோயின் தாக்குதல் அதிகரித்து தென்னை மரங்கள் அழிந்து வருகிறது. எனவே தமிழக அரசு தென்னை விவசாயிகளுக்கு "அசாடிராக்சின்' மருந்தை இலவசமாக வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து மருதேரியை சேர்ந்த தென்னை விவசாயி குமரேசன் கூறியது:கடந்த காலங்களில் தென்னையில் ஈரியோபைட் நோய் தாக்குதல் ஏற்பட்ட போது அரசு இலவசமாக "அசாடிராக்சின்' மருத்தினை வழங்கியது. இதனை விவசாயிகள் பெற்று ஒரே நேரத்தில் உபயோகப்படுத்தியதால் ஓரளவுக்கு நோய் கட்டுக்குள் வந்தது. இந்நிலையில் கடந்த இரு ஆண்டிலிருந்து மாவட்டத்தில் மீண்டும் ஈரியோஃபைட் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது.கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன், ஒரு லிட்டர் மருந்தின் விலை 700 ரூபாய் என்பதால் ஒரே நேரத்தில் அனைத்து விவசாயிகளும் மருந்தை வாங்க முடியவில்லை. ஈரியோஃபைட் நோய் தாக்குதலுக்கு இடையே தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் அதிக அளவு தென்னை மரங்கள் காய்ந்து வருகிறது. நோயை கட்டுப்படுத்த தமிழக அரசு இலவசமாக "அசாடிராக்சின்' மருந்தினை வழங்காவிட்டால் மாவட்டத்தில் அதிக அளவில் தென்னை மரங்கள் அழிந்துவிடும்.இவ்வாறு அவர் கூறினார்.

**கீழ்பவானி பாசனத்துக்கு அணை நீர் திறப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2011,02:31 IST

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணையில் இருந்து நேற்று மதியம் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனம் முதல்போக சாகுபடிக்கு ஆகஸ்ட் 15ம் தேதி தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். அணையில் போதிய நீர் இருப்பு உள்ளதால், நன்செய் பயிர் சாகுபடிக்காக தண்ணீர் திறக்க வேண்டுமென, விவசாயிகள் கோரினர். இதன்படி, பாசனத்துக்கு நீர் திறக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.நேற்று காலை அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்காலுக்கு 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணை மதகை, ஈரோடு மாவட்ட கலெக்டர் காமராஜ் திறந்து வைத்தார்.

மதகு வழியாக கால்வாயில் வெளியேறிய நீரை மலர் தூவி வரவேற்றனர்.நடப்பாண்டு கீழ்பவானி திட்ட பிரதானக்கால்வாய் மற்றும் நீட்டிப்பு கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும், சென்னசமுத்திரம் பகிர்மான வாய்க்கால் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டம் சத்தி, கோபி, பவானி, ஈரோடு, திருப்பூர் மாவட்டம் காங்கேயம், கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி தாலுகாக்கள் இதன் மூலம் பயன்பெறும். இப்பகுதியில் உள்ள ஒரு லட்சத்து 3,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.நேற்று முதல்கட்டமாக 500 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு, கால்வாயின் முழு கொள்ளளவான 2,300 கன அடி தண்ணீர் திறக்கப்படும்.

அணையின் நேற்றைய நீர்மட்டம் 84.15. அணைக்கு 1,060 கன அடி தண்ணீர் வரத்தானது. அரக்கன்கோட்டை, தடப்பள்ளி வாய்க்கால் பாசனத்துக்காக ஏற்கனவே 900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.""அணை நீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்," என, கலெக்டர் காமராஜ் கூறினார்.பாசன நீர் திறப்பு நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.,க்கள் காங்கேயம் நடராஜ், பவானிசாகர் சுந்தரம், பவானி நாராயணன், மொடக்குறிச்சி கிட்டுசாமி, பெருந்துறை வெங்கடாசலம், கோபி ஆர்.டி.ஓ., பாலசுப்பிரமணி, முன்னாள் எம்.பி., காளியப்பன், அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் வரதராஜன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயலாளர் துளசிமணி, பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் பலர் பங்கேற்றனர்.

**பழக்கன்றுகள் நடவு செய்ய மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2011,00:56 IST

திண்டுக்கல் : ஆத்தூர் வட்டாரத்தில் பழக்கன்றுகள் நடவு செய்ய முன்வரும் விவசாயிகளுக்கு, தோட்டக்கலை துறை சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் ஆத்தூர் ஒன்றியத்தில் 75 எக்டேரில் மா, நெல்லி பயிரிட 75 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. மா பயிரிடும் விவசாயிகளுக்கு பழக்கன்றுகள், உரம், பூச்சி மருந்துகள் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக நான்கு எக்டேர் வரை மானியம் வழங்கப்படும். மா, நெல்லி பயிரிட விரும்பும் விவசாயிகள், போட் டோ, ரேஷன் கார்டு நகல், சிட்டா, அடங்கல் ஆவணங்களுடன், ஆத்தூர் ஒன்றிய அலுவல வளாகத்தில் அமைந்துள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என, உதவி இயக்குனர் ஷெடிபாய் தெரிவித்தார்.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொள்ளை :விவசாயிகள் பெரும் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2011,01:47 IST

திருவண்ணாமலை: சேத்துப்பட்டு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் அதிகாரிகளும், வியாபாரிகளும் கூட்டு சேர்ந்து விவசாயிகளிடம் நூதன முறையில் மோசடி செய்து வருகின்றனர். இதனால், விவசாயிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.திருவண்ணாமலை மாவட்டம் விவசாயத்தை மட்டும் நம்பியுள்ள மாவட்டம். மாவட்டத்தின் மையப்பகுதியில் உள்ள சேத்துப்பட்டு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் தினம், 5,000 முதல், 10 ஆயிரம் மூட்டை நெல் வரை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.அதோடு மட்டுமல்லாமல் தானிய வகைகளான துவரை, உளுந்து, கடலை, எள் போன்ற தானிய வகைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

அதனால், சேத்துப்பட்டு ஒழுங்கு முறை விற்பனை கூடம் விற்பனையில் தமிழகத்தில் இரண்டாம் இடத்தில் உள்ளது.சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை நம்பி திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் பயன் அடைந்து வருகின்றனர். சமீப காலமாக ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் அதிகாரிகளும், வியாபாரிகளும் சிண்டிகேட் அமைத்து கூட்டு கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர்.விவசாயிகள் கொண்டு வரும் நெல்களை கொள்முதல் செய்ய தமிழகத்தில் பல்வேறு பகுதியிலிருந்து நெல் அரவையாளர்கள்,

நெல்களை மொத்தமாக வாங்கி ஸ்டாக் வைத்து விலை ஏறும்போது விற்கும் பணக்கார வியாபாரிகள் என நூற்றுக்கணக்கானோர் இங்கு வருகின்றனர்.இவர்களுக்கு உதவியாக சில புரோக்கர்களும் உடன் வருவர், இது போன்ற புரோக்கர்கள் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் உள்ள அதிகாரிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையிலேயே கமிஷன் தொகை பெற்று தரும் புரோக்கர்களாகவும் வலம் வருகின்றனர்.புரோக்கர்கள் தினம் மார்க்கெட் கமிட்டிக்கு எவ்வளவு மூட்டை நெல் வந்துள்ளதை கணக்கீட்டு வியாபாரிகளிடம் கூறுவர், அப்போது வியாபாரிகள் அனைவரும் சிண்டிகேட் அமைத்து ஒரு குறிப்பிட்ட வியாபாரிகளின் பெயரில் மொத்த நெல்லையும் குறைந்த விலை நிர்ணயம் செய்து கொள் முதல் செய்வர். அதற்கு ஒழுங்கு முறை விற்பனை கூட அதிகாரிகளும் உடந்தையாக செயல்படுகின்றனர்.

விவசாயிகளிடம் கொள் முதல் செய்யப்படும் நெல்லை வியபாரிகள் உடனே பணத்தை செலுத்தி அங்கிருந்து நெல் மூட்டைகளை எடுத்து சென்றுவிட வேண்டும். ஆனால், வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்ததற்கான பணத்தை உடனே செலுத்தாமல் பாதுகாப்பாக விவசாயிகள் கொண்டு வரும் நெல்களை வைப்பதற்கு ஒதுக்கப்பட்ட குடோன்களை வியாபாரிகள் ஆக்கிரமித்து கொண்டு நெல் மூட்டைகளை அங்கேயே அடுக்கி கொள்வர்.அதிகாரிகள் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் உள்ள குடோன்களில் நெல் மூட்டைகளை பாதுகாப்பாக வைக்க நாள் ஒன்றுக்கு ஒரு மூட்டைக்கு, 2 ரூபாய் முதல், 5 ரூபாய் வரை கமிஷன் தொகை பெற்று கொள்கின்றனர்.விவசாயிகள் கொண்டு வரப்படும் நெல் வெளியே மைதானத்திலே வைக்கப்படும், மழை காலங்களில் இந்த நெல் முழுவதும் நனைந்து முளைப்பு தன்மை ஏற்பட்டு விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறது.இது போன்று நெல்லை வியாபாரிகளுக்கு அதிக பட்ச விலை நிர்ணயம் செய்யாமல் இருக்க கமிஷன் தொகை கொடுக்கப்பட்டு குறைந்த பட்ச விலையை நிர்ணயம் செய்தல், நெல் மூட்டைகளில் எடை முறைகேடு என பல்வேறு வகையில் விவசாயிகளிடையே மோசடி செய்யப்பட்டு அதிகாரிகளும், வியாபாரிகளும் பயனடைந்து வருகின்றனர்.விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்படாமல், 10 நாட்களுக்கு பிறகு பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

இதுபோன்ற பல்வேறு வகையான முறைகேட்டால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது போன்ற முறைகேடுகளை களைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மானிய விலையில் இடுபொருள் வினி@யாகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2011,00:42 IST

சிவகங்கை : ""விவசாய விரிவாக்க மையங்களில் மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படும்," என, விவசாய இணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார். அவர் கூறுகையில்,"" ஆடுதுறை - 39, 45 நெல் விதைகள் கிலோவிற்கு 5 ரூபாய் மானியத்தில்

வழங்கப்படும். கைத்தெளிப்பானுக்கு 800 ரூபாய், விசை தெளிப்பானுக்கு 2,000 ரூபாய், ஜிப்சம் மற்றும் நுண்ணுரம், ஜிங்சல்பேட், தக்கைப்பூண்டு போன்றவை மானியத்தில் வழங்கப்படும். இது தவிர செம்மைநெல் சாகுபடி செயல்விளக்க திடல் அமைக்க மானியம் 3,000 ரூபாய்; பயறு விதைகள் கிலோவிற்கு 20 ரூபாய் மானியம் தரப்படும். நெல் விதைகளை தொடக்கவிவசாய கூட்டுறவு வங்கிகளிலும் பெறலாம். மேலும் விபரங்களுக்கு அந்தந்த பகுதி விவசாய விரிவாக்க மையம், விவசாய அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

**பவானிசாகர் அணை இன்று திறப்பு**

First Published : 15 Aug 2011 03:11:27 AM IST

சென்னை, ஆக. 14: பாசன வசதிக்காக பவானி சாகர் அணையில் இருந்து திங்கள்கிழமை (ஆக. 15) தண்ணீர் திறந்துவிடப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். பவானிசாகர் அணையிலிருந்து, கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் மற்றும் நீட்டிப்பு கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மூலமாகவும், சென்ன சமுத்திரம் பகிர்மான வாய்க்காலில் ஒற்றைப்படை மதகுகள் மூலமாகவும் நன்செய் பயிர் சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடப்படும். இதனால், ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களில் உள்ள சுமார் 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**விவசாய பொருட்களுக்கான வரிகள் அனைத்தும் ரத்து: அமைச்சர்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,01:00 IST

திருவண்ணாமலை: தமிழகத்தில் விவசாயிகள் பயனடையும் வகையில், விவசாய பொருட்களான உரம், கருவிகள் மற்றும் இடுபொருட்கள் ஆகிவற்றுக்கான வரிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். போளூர் அருகே கேளூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம், சிறுவள்ளூரில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் கட்டப்பட்ட 7லட்சத்து 50ஆயிரம் மதிப்பிலான பள்ளிக்கட்டிடம், வெங்கட்டம்பாளையத்தில் 6லட்சம் மதிப்பிலான ஊராட்சி மன்ற கட்டிடம் ஆகியவற்றை திறந்துவைத்து அமைச்சர் பேசியதாவது: தமிழகத்தில் விவசாயிகளுக்கு உரம், விவசாயக்கருவிகள், விவசாய இடுபொருட்கள் போன்ற விவசாயத்திற்கு பயன்படுத்தக்கூடிய பொருட்களுக்கு கடந்த தி.மு.க., அரசு 4 சதவீதமாக விதிக்கப்பட்டிருந்த வரியை தமிழக அரசு முழுமையாக ரத்து செய்துள்ளது.திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுவரை தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலம் 13 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 14.250 மெட்ரிக்டன் நேரடி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் என்ற போர்வை போர்த்தி கொண்டு செயல்படும் வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு தொடக்கப்பள்ளி கட்டப்பட வேண்டும் என்ற அரசின் திட்டத்திற்கு ஏற்ப தொடக்கப்பள்ளிகள் கட்டப்பட்டு வருகின்றன. அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் தற்போது இரண்டு புதிய வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மாணவ, மாணவிகள் அனைவரும் இதனை நன்கு பயன்படுத்தி பயனடையவேண்டும். இவ்வாறு அவர் பேசினார். டி.ஆர்.ஓ. வளர்மதி. எம்.எல்.ஏ., ஜெயசுதா, சி.இ.ஓ., சுகன்யா, உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சான்று பெற்ற நெல் விதைகளுக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,22:58 IST

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் சான்று பெற்ற நெல் விதைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இது குறித்து வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சான்று பெற்ற நெல் விதைகளுக்கு கிலோவிற்கு 5 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் 1060 டன் நெல் விதைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இதில் மானியம் சான்று பெற்ற நெல் விதைகளான ஏ.டி.டி 43, 45, 39,36, கோ 43, 48, 50, ஏ.ஸ்.டி 19, பி.பி.டி 5204 ஆகிய ரகங்கள் வழங்கப்படுகிறது. விரிவாக்க மையங்களில் இருப்பில் உள்ள அனைத்து சான்று நெல் விதைகளுக்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு மையங்களில் இருப்பில் உள்ள சான்று பெற்ற நெல் விதைகளுக்கும் நிதி நிலைக்கேற்ப மானியம் வழங்கப்படுகிறது. சம்பா நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் நெல் விதைகளை மானிய விலையிலும் விதை நேர்த்தி மருந்துகளான சுடோமோனாஸ் மற்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் நுண் உர பொட்டலங்களை பெற்று பயனடையவும். இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**சம்பா சாகுபடிக்கு உரங்கள் தயார்வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,22:58 IST

கடலூர் : மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்குத் தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:மாவட்டத்தில் ஒவ்வொரு மாதத்திற்கு தேவையான உரங்கள் ஒதுக்கீடு பெற்று தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டத்தில் நடைபெறும் சம்பா சாகுபடிக்கு இந்த மாதத்திற்கு தேவையான உரங்கள் யூரியா 1,710 மெட்ரிக் டன், டி.ஏ.பி., 1850 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரம் 3,220 மெட்ரிக் டன் மற்றும் பொட்டாஷ் 276 மெட்ரிக் டன் உரங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உர நிறுவனங்களில் இருப்பு உள்ளன. எனவே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான அளவிற்கு உரங்களை தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உர நிறுவனங்களில் வாங்கிக் கொள்ளலாம். உரங்களை வாங்கும் போது அந்த மூட்டையில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச சில்லரை விலைக்கு உட்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். உர வினியோகத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பின் விவசாயிகள் அந்தந்த பகுதி வட்டார வேளாண் உதவி இயக்குனர்களிடம் முறையிடலாம். உரங்களை கூடுதல் விலைக்கு விற்கும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**உர வியாபாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,23:09 IST

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை தாலுகாவில் விற்பனை செய்யும் உர வியாபாரிகள், கூட்டுறவு சங்க அதிகாரிகளுடனான ஆலோசனை கூட்டம் நடந்தது. விழுப்புரம் வேளாண் உதவி இயக்குனர்(தரக்கட்டுப்பாடு) சங்கர் தலைமை வகித்தார். உளுந்தூர்பேட்டை வேளாண் உதவி இயக்குனர் தயாநிதி வரவேற்றார். கூட்டத்தில் உர விற்பனை தொடர்பாக ஆலோ சனைகள் வழங்கப்பட்டன. விவசாயிகளும் கலந்து கொண்டனர்.இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) சங்கர் நிருபர்களிடம் கூறியதாவது: விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 237 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் இருப்பு உள்ளன. தனியார் கடைகளிலும் உரங்கள் கிடைப்பதால் தட்டுப்பாடு இருக்காது. உர விற்பனையாளர்கள், கடைகளில் உர விலை பட்டியலை எழுதி வைத்த அந்த விலைக்கு மட்டுமே விற்க வேண்டும். உரத்தை பதுக்கி வைத்தல், கூடுதல் விலை வைத்து விற்க கூடாது. தரமற்ற

கலப்பட உரங்களை விற்க கூடாது. விவசாயிகளும் மூட்டையில் குறிப்பிட்டுள்ள விலையை மட்டுமே கொடுக்க வேண்டும். உர விற்பனை தொடர்பான சந்தேகம் இருந்தால் 94430 74085, 99524 20751 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம். மாவட்டத்தில் உர விற்பனை கடைகளை கண்காணிக்க பறக்கும் படை உருவாக்கி ரெய்டு நடத்தப்படும். இவ்வாறு வேளாண் உதவி இயக்கனர் (தரக்கட்டுப்பாடு) சங்கர் கூறினார்.

**வெங்காய ஏற்றுமதி விலை அதிகரிப்பு**

First Published : 15 Aug 2011 12:18:02 AM IST



புது தில்லி, ஆக. 14: உயர்ந்து வரும் வெங்காயத்தின் விலையை கட்டுப்படுத்தும் வகையில், அதன் ஏற்றுமதி விலையை அதிகரித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. சமீபத்தில் வெங்காயத்தின் விலை சில்லறை மார்க்கெட்டில் கட்டுக்கடங்காத அளவுக்கு உயர்ந்ததை அடுத்து அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அதன்படி, டன் ஒன்று ரூ.2,046 என்ற அளவில் இருந்த சாதாரண ரக வெங்காயத்தின் ஏற்றுமதி விலை இப்போது ரூ.12,503-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் ஏறுமுகத்தில் இருந்த விலை கிலோ ரூ.20 என்ற அளவுக்கு குறைந்துள்ளது. அதேபோல், உயர் ரகங்களான கிருஷ்ணாபுரம், பெங்களூர் வெங்காயம் ஏற்கெனவே இருந்த ஏற்றுமதி விலையான டன் ரூ.2,273-லிருந்து, ரூ.18,187-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

உள்நாட்டில் அதிகரித்து வரும் வெங்காயத்தின் விலையை கட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் இதற்கான உத்தரவுகளை பிறப்பித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டு டிசம்பரில் வரலாறு காணாத அளவில் கிலோ வெங்காயம் ரூ.80 முதல் 90 என்ற அளவுக்கு உயர்ந்ததை அடுத்து வெங்காய ஏற்றுமதியை மத்திய அரசு முற்றிலுமாகத் தடை செய்தது. இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அதன் விலை சற்றுக் குறைந்ததை அடுத்து தடை உத்தரவு விலக்கிக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**கூடுதல் மகசூல் பெற தரமான விதை பயன்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,00:53 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மானாவாரி சாகுபடியின் போது தரமான விதைகளை பயன்படுத்தி நல்ல மகசூலை பெறுமாறு கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ஜான் லூர்து சேவியர் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது மானாவாரி சாகுபடிக்கு வயல்கள் தயார் படுத்தப்பட்டுள்ளது. இந்த பட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர்களான சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துகள் மற்றும் பருத்தி பயிர்களின் விதைகள் தரமானதுதானா என விவசாயிகள் அறிந்து சாகுபடி செய்ய வேண்டும். விதைகளை வாங்கும் முன்பு அந்த விதைகளுக்கு உரிய முளைப்பு திறன் பகுப்பாய்வு அறிக்கையினை கேட்டு சரிபார்க்க வேண்டும். விதைகளின் தரத்தினை அறிந்து கொள்ள கிருஷ்ணகிரி மோகன்ராவ் காலனி முதல் குறுக்கு தெருவில் விதை பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. கடந்த ஜீலை 15ம் தேதி முதல் சான்று விதை மாதிரிகள் மற்றும் ஆய்வாளர் விதைமாதிரிகள், பகுப்பாய்வுகள் கிருஷ்ணகிரி வேளாண் இணை இயக்குனர் நாச்சியப்பன் தொடங்கி வைத்துள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் இந்த விதைப்பரிசோதனை நிலையத்தின் ஆளுமை பகுதிகளாகும். எனவே கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதிலிருந்து பெறப்படும் சான்று விதைமாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணிவிதை மாதிரிகள் இந்நிலையத்தில் பரிசோதனை செய்து முடிவுகள் வழங்கப்படும். அனைத்து விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள், விவசாயிகள் விதை மாதிரிகளை இந்நிலையத்திற்கு அனுப்பி விதைகளின் தரத்தினை அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி சாகுபடி செய்யலாம்.

**22,500 டன் ராகி உற்பத்தி வேளாண் துறை இலக்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,00:53 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில் நடப்பாண்டு, 22,500 டன் ராகி உற்பத்தி செய்ய வேளாண்மை துறை இலக்கு நிர்ணயித்துள்ளது. குறைந்த முதலீட்டில் கூடுதல் லாபம் கிடைப்பதால், விவசாயிகள் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டிவருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. மாவட்டத்தில் நெல், ராகி, வாழை, சோளம், மா, கரும்பு, காய்கறிகள், பழங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் மலர்கள் உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில், 50 ஆயிரம் ஹெக்டேரில் ராகி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக ஓசூர் தாலுகாவில், 9,000 ஹெக்டேரில் ராகி சாகுபடி நடக்கிறது.

ஓசூர், பாகலூர், சூளகிரி, பூனப்பள்ளி, பேளகொண்டப்பள்ளி, பேரிகை சுற்றுவட்டார பகுதிகளில் அதிகளவில் ராகி சாகுபடி நடக்கிறது. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், ஒரு ஹெக்டேருக்கு அதிகபட்சம், 2 டன் வீதம் மொத்தம் ஓசூர் தாலுகாவில், 18 ஆயிரம் டன் மகசூல் கிடைத்தது. கடந்த காலத்தில் ராகி உணவுக்காக மட்டும் பயிரிடப்பட்டது. தற்போது உணவு தேவைக்கு மட்டுமின்றி பல்வேறு வகை உணவு பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு கர்நாடகா, ஆந்திரா மற்றும் வடமாநிலங்களுக்கு அதிகளவில் ஏற்றுமதியாகிறது.

ராகி சாகுபடியை பொறுத்தவரை, குறைந்த முதலீட்டில் நல்ல வருமானம் கிடைக்கிறது. ஒரு ஹெக்டேருக்கு, 10 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலவாகிறது. செலவு போக, ஹெக்டேருக்கு, 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. இதனால், தற்போது போதிய பருவமழை பெய்யாதநிலையிலும், பருவமழையை எதிர்பார்த்து விவசாயிகள் ராகி சாகுபடியில் ஆர்வமாக ஈடுப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் ஜூலை 15ம் தேதிக்கு மேல் ஆகஸ்ட் வரை ராகி சாகுபடி நடக்கிறது. அதன்பின் நவம்பர், டிசம்பரில் அறுவடை செய்து போர் வைக்கப்படுகிறது. குளிர்காலம் முடிந்து கோடை காலம் துவங்கியபின் பிப்ரவரி முதல் போரில் வைக்கப்பட்ட ராகி அடித்து ராகி மணிகள் தனியாக பிரிக்கப்படுகிறது. ராகி சாகுபயில் ராகி உற்பத்தியை தவிர அவற்றின் வைக்கோல்களும் விற்பனை செய்வதால், விவசாயிகளுக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கிறது. ராகி வைக்கோல் செடி வளர்ச்சியை பொறுத்து ஒரு டிராக்டர் லோடுக்கு 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகிறது.

ராகி வைக்கோல் பொதுவாக கால்நடைகளுக்கு நல்ல உணவு தீவனமாக பயன்படுகிறது. அதனால், ராகி வைக்கோல்களுக்கு தமிழகத்தில் நல்ல வரவேற்பு உள்ளது. ராகியில் கால்சியம் சத்து அதிகளவில் காணப்படுவதால், எலும்புகளுக்கு அதிக வலு கொடுப்பதோடு உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவுகிறது. இதனால் வடமாநிலங்களில் ராகி முக்கிய உணவாக பயன்படுத்தப்படுகிறது. கோழி பண்ணைகளில் கோழி தீவனமாக ராகி பயன்படுகிறது. இதனால், ஓசூர் பகுதியில் இருந்து நாமக்கல், ஈரோடு, கோவை மற்றும் சேலம் உள்ளிட்ட கோழிப்பண்ணைகள் அதிகமுள்ள மாவட்டங்களுக்கு ராகி அதிகளவில் ஏற்றுமதியாகிறது.

இதுகுறித்து ஓசூர் வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜ் கூறிதாவது: ராகி சாகுபடியில் ஹெக்டேருக்கு 2 டன் வரை மகசூல் கிடைத்தது. நடப்பாண்டு பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால், ஹெக்டேருக்கு 2 1/2 டன் மகசூல் கிடைக்கிறது. இதனால், நடப்பாண்டு ஓசூர் தாலுகாவில் 22,500 டன் உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**அதிக விலைக்கு உரம் விற்பனை செய்தால் உரிமம் ரத்து**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,02:06 IST

நாமக்கல்: "அதிக விலைக்கு உரம் விற்பனை செய்தால், அதன் உரிமம் ரத்து செய்யப்படும்' என, வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாக்கல் வட்டாரத்தில், பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உரம் வாங்கும்போது மூட்டை மேல் குறிப்பிட்டுளள விலைக்கு உரம் வாங்க வேண்டும். விற்பனை ரசீதை உரக்கடை உரிமையாளர்களிடம் கேட்டு வாங்கவும், விற்பனை ரசீது தராமல் அதிக விலைக்கு விற்பனை செய்தால், நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மைய அதிகாரிகளை நேரில் அல்லது 04286-233698 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார் செய்யலாம். அதுபோல், உரக்கடை உரிமையாளர்கள் உரம் விற்பனை செய்யும்போது, மூட்டை மீது குறிப்பிட்ட விலைக்கு உரம் விற்பனை செய்ய வேண்டும். அதற்கு பில் வழங்க வேண்டும். அதுபோல் உரிமத்தில் அனுமதி பெற்ற உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். உரிமத்தில் அனுமதி பெறாத உரங்களை விற்பனை செய்தாலோ, அதிக விலைக்கு விற்பனை செய்தாலோ, அதன் உரிமம் ரத்து செய்யப்படும். மீறினால் உரக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உதவி வேளாண் அலுவலர் கோரிக்கை கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,01:12 IST

தஞ்சாவூர்: உதவி வேளாண்மை அலுவலர்கள் கோரிக்கை கருத்தரங்கம் தஞ்சாவூர் பெசண்ட் அரங்கத்தில் நடந்தது.திருவையாறு துணை வேளாண்மை அலுவலர் அயூப்கான் தலைமை வகித்தார். திருவோணம் வேளாண்மை அலுவலர் வெங்கடாச்சலம் முன்னிலை வகித்தார். சேதுபாவாசத்திரம் வேளாண்மை உதவி அலுவலர் சின்னதுரை வரவேற்றார். புதிதாக பணியேற்றுள்ள உதவி வேளாண்மை அலுவலர்களின் பணி பாதுகாப்பு செய்தல் வேண்டும். உதுவி வேளாண்மை அலுவலர்களின் அடிப்படை ஊதியத்தை இதரத்துறை பட்டயதாரர்களுக்கு இணையாக பெற வேண்டும். உதவி விதை அலுவலர்களை துணை வேளாண்மை அலுவலர்களாக பதவி உயர்த்த வேண்டும். பத்தாண்டுகள் பணி முடித்த உதவி வேளாண்மை அலுவலர்களை துணை வேளாண்மை அலுவலர்களாக பதவி உயர்த்த வேண்டும். புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை வழங்க வேண்டும். 2006 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் 31 முடிய உள்ள ஊதியக்குழு நிலுவைத்தொகையை வழங்க வேண்டும். 20 ஆண்டுகள் பணியை நிறைவு செய்த அனைவருக்கும் மத்திய அரசு வழங்குவது போல் முழு

ஓய்வூதியம் வழங்க வேண்டும். கடந்த 2008ம் ஆண்டு பணி சீரமைப்பினால் வேளாண்மைத்துறையில் பணிச்சுமையை கருத்தில் கொண்டு டெல்டா மாவட்டங்களில் வட்டாரத்துக்கு ஆறு உதவி வேளாண்மை அலுவலர்கள் என்பதை ஏழு வருவாய் கிராமத்துக்கு ஒரு உதவி வேளாண்மை அலுவலர்கள் வீதம் அதிகரித்து பெற வேண்டும். வேளாண்மை துறையில் விரிவாக்க அலுவலர்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்படும் புதிய வாகனக்கடன் முன் பணத்தை உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு என தனி ஒதுக்கீடு பெற வேண்டும் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**விதை கிராமத்திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2011,01:12 IST

கும்பகோணம்: பாபநாசம் அருகே விதை கிராமத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. கும்பகோணம் அருகே உள்ள ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் பாபநாசம் வட்டம் புத்தூர் கிராமத்தில் விதை கிராமத்திட்டத்தின் நெல் பயிரில் தரமான விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய முதல்கட்ட பயிற்சி நடந்தது. பயிற்சி முகாமிற்கு தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் வைத்திலிங்கம் தலைமை வகித்து முகாமை தொடங்கி வைத்து பேசுகையில், "குறுவையில் விதை உற்பத்திக்கு ஏற்ற இரகங்கள் மற்றும் அவைகளின் குணாதிசயங்கள் பற்றி விளக்கினார். தஞ்சாவூர் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவி பொதுமேலாளர் இரவிக்குமார் திட்ட விளக்க உரை நிகழ்த்தினார்.

உழவியல் துறை பேராசிரியர் தேவசேனாபதி நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சி அளித்தார். பூச்சியியல் துறை பேராசிரியர் ஜலாலுதீன், நெற்பயிரினை தாக்கும் பூச்சி மற்றும் பூஞ்சானங்கள் மற்றும் அவைகளை கட்டுப்படுத்தும் முறைகளை பற்றி விளக்க பயிற்சி அளித்தார். விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை உதவி பேராசிரியர் முனைவர் ராஜா, விதை தேர்வு, விதை நேர்த்தி மற்றும் அடர்த்தி முறையில் விதை நெல் தரம் பிரித்தல் குறித்த செயல் விளக்கம் அளித்தார். பயிற்சியில் 30 பயனாளி விவசாயிகள் கலந்துகொண்டனர். விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப உதவிப் பேராசிரியர் இராஜா பயிற்சியில் கலந்துகொண்டவர்களை வரவேற்றார். வயல்வெளி உதவியாளர் வேம்புராஜலெட்சுமி நன்றி கூறினார்.

## ஐரோப்பாவில் தேவைப்பாடு குறைந்ததால் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி 10 சதவீதம் சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இந்தியாவிலிருந்து அதிக அளவில் கடல் உணவு பொருள்களை இறக்குமதி செய்யும் ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தேவைப்பாடு குறைந்துள்ளது. இதன் காரணமாக, நடப்பு ஆண்டின் ஜூலை மாதத்தில் நாட்டின் கடல் உணவு பொருகள் ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 10 சதவீதம் சரிவடைந்து 20.40 கோடி டாலரிலிருந்து 18.30 கோடி டாலராக (ரூ.823.50 கோடி) குறைந்துள்ளது. கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது

ஜப்பான்

இந்தியாவின் கடல் உணவு பொருள்கள் மொத்த ஏற்றுமதியில், ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பான் ஆகியவற்றின் பங்களிப்பு முறையே 26 சதவீதம் மற்றும் 13 சதவீதமாக உள்ளது. இந்நாடுகளுக்கு அடுத்தபடியாக சீனாவும் நம் நாட்டிலிருந்து கடல் உணவு பொருள்களை அதிக அளவில் இறக்குமதி செய்கிறது.

சில ஐரோப்பிய நாடுகள் கடன் சுமையில் சிக்கி தவிப்பதால், அந்நாடுகளில் கடல் உணவு பொருள் பயன்பாடு குறைந்துள்ளது. இவ்வாண்டில், ஜப்பான் நாட்டில் பூகம்பமும், சுனாமியும் ஏற்பட்டது. இதனையடுத்து, அந்நாடுகளிலிருந்து கடல் உணவு

பொருள்களுக்காக கிடைக்கும் ஆர்டர்கள் குறைந்துள்ளன.

ஜூலை மாதத்தில், கடல் உணவு பொருகள் ஏற்றுமதி சரிவடைந்துள்ள நிலையிலும், நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் (ஏப்ரல் – ஜூலை) இது, சென்ற நிதி ஆண்டின் இதே மாதங்களைக் காட்டிலும் 8 சதவீதம் அதிகரித்து 64.38 கோடி டாலராக (ரூ.2,897 கோடி) உயர்ந்துள்ளது.

அன்னியச் செலாவணி

கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில், கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி, அதற்கு முந்தைய நிதி ஆண்டைக் காட்டிலும் 25.5 சதவீதம் அதிகரித்து 260 கோடி டாலராக (ரூ.11,700 கோடி) உயர்ந்துள்ளது. இது, அனைத்து பொருள்களின் மொத்த ஏற்றுமதியில் 1 சதவீதமாகும். ஏற்றுமதி அதிகரிப்பதால், அன்னியச் செலாவணி கையிருப்பு அதிகரித்து நாட்டின் பொருளாதாரம் மேம்படும்.